[1986 நவம்பர் 17

மதுரை பெரியார் பேருந்து நிலைய மேம்பாலத்தில் பிரிவுப் பாதை அமைக்கும் திட்டம்.

33—(*வினா எண் 5048) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் ''பெரியார் பேருந்து நிலையத்திற்கு மேல்புறமுள்ள ரெயில்வே மேம்பாலம் சீர்படுத்தப்பட்டு, எல்லிஸ் நகருக்கு நேராகச் செல்கின்ற வகையில் மேம்பாலத்தில் புதிதாக மற்றொருப் பிரிவுப் பாதை அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணிகள் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்குஇடமில்லை.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, பெரியார் பஸ் நிலையத்திலிருந்து மேற்குப் புறமாக இருக்கின்ற இந்த ரயில்வே மேம்பாலத்தை, மேற்குப்புறமாக இன்னும் சிறிது விரிவுபடுத்தி, நேரடியாக எல்லிஸ் நகரம் வழியாக அதை தேசிய நெடுஞ்சாலை யோடு இணைக்கின்ற செயலைச் செய்தால், அதன்மூலம் மதுரை பெரியார் பஸ் நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை மிகக் குறைந்த அளவிலான தூரத்தில் அடைவதற்கும் மதுரையிலிருந்து வெளியே செல்வதற்கும் ஒரு வாய்ப்பான சாலையாக அமையும்.

அது மட்டுமல்ல, இந்தப் பாலம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. மிகவும் குறுகலாக இருக்கின்றது. அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. இந்தச் சாலைப் பாலத்தின் வழியாகத்தான் பாண்டியன் போக்குவ த்துக் கழக பஸ்கள் அத்தனையும், ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட பஸ்கள் தினமும் சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் சுற்றி பைபாஸ் ரோட்டிலுள்ள மையப் பணி மனையை அடைய வேண்டிய நிலை இருக்கிறது. மேற்குப்புற சாலையை விரிவுபடுத்திக் கொடுத்தால் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில், மையப் பணிமனையை, இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள், 400, 500 பஸ்கள் விரைவில் வந்தடையும். அதன்மூலம் டீசலும் மிச்சப் படுகின்ற வாய்ப்பு இருப்பதையும் கவனத்தில் கொண்டு, எதிர் காலத்திலாவது இந்தப் பணியை விரைவில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ரூ. 220 இலட்சம் ஆகும் என்று கணக்கிடப் படுகிறது. ரயில்வே சம்பந்தப்பட்டிருக்கின்ற வேலையாக இருந்தாலும்கூட, ரயில்வே அனுமதிக்காக மட்டும்தான்

அவர்களிடத்திலே செல்ல வேண்டியிருக்கிறது, பணத்திற்காக அல்ல. காரணம், அதற்குப் பணம் ஒதுக்க முடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். எனவே மதுரை மாநகராட்சியும், அரசும்தான் சேர்ந்து இந்தப் பணிகளை மொத்தமாக செய்ய வேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் இதை ஆய்வு செய்யலாம்.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, தற்போது இந்தப் பாலத்தில் இருக்கக்கூடிய தடுப்புச் சுவர்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. தடுப்புச் சுவர்களே இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கின்றன. மேலும் விளக்கு வசதியில்லாமல் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு, தடுப்புச் சுவர் வசதிகள், விளக்கு வசதிகள் இவைகளை உடனடியாக ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர்களைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறை சில நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யலாம். ஆனால் விளக்கு வசதிகளைப் பொறுத்தவரையில், மாநகராட்சி தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. எ. தெய்வநாயகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது இந்தத் திட்டத்திற்காக செலவழிக்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் உலக வங்கி நிதியின் மூலம் வேலையைத் துரிதமாகச் செய்ய முடியும். உலகவங்கியின் மூலமாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, உலக வங்கியின் திட்டத்திலே இது சேரவில்லை. மாநகராட்சியும் அரசும் சேர்ந்துதான் இந்தத் திட்டத்திற்கு ஆகும் பணத்தை செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே நம்முடைய நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கூறும்போது, இதனுடைய மதிப்பீடு ரூ. 220 இலட்சம் என்று குறிப்பிட்டார்கள். திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்லீஸ் நகரம் மிகப் பெரிய நகரமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அப்படி வளர்ந்து வருகின்றபோது நகரத்தின் தேவைகளை அனுசரித்து, ரயில்வே மேம்பாலம் குறுகிய நிலையில் இருப்பதால், பல மணி நேரம் இதனால் போக்குவரத்து தடைபடுவது அன்றாட நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து, இந்தத் திட்டத்தை விரிவான முறையில் நிறைவேற்றுவதற்கு முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதில் எனக்கு எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. நான் இதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். நமக்கு இருக்கின்ற பணப் பிரச்னையின் காரணமாகத்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னேனேயொழிய, இது தேவையற்றது என்றோ, அவசிய மில்லை என்றோ நான் சொல்லவில்லை. நிதிநிலைமை எப்போது சரியாகின்றதோ, அப்போது நிச்சயமாக இந்த வேலை துவக்கப் படும்.

குமரி மாவட்டத்தில் புதிய பணிமனை

34—(*வினா எண் 8622) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக பணிமனை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இரண்டும், தொடுவட்டியில் ஒன்றும், ஆக மூன்று பணிமனைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் பணிமனை கட்டப்படும். இது கேள்வி கேட்ட நேரத்திலே இருந்த நிலை.

இப்போது இன்னொரு பணிமனை கூடுதலாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திங்கள் சந்தையில் ஒன்றும், தொடுவட்டியில் ஒன்றும், நாகர்கோவிலில் இரண்டும், ஆக மொத்தம் 4 பணிமனைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளையாற்றின் குறுக்கே பாலம்

35—(*வினா எண் 8930) திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளை யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.